# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 14 ஆம் நாள், வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண் 41க்குட்பட்ட கிராப்பட்டி, ரெங்கா நகர் வார்டுகளை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளவும், குப்பைகளினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளை தவிர்ப்பதற்காகவும், கிராப்பட்டி பிரிவு அலுவலக வளாகப் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நுண் உரக்கிடங்கு கட்டும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.75.00 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

1) மதிப்பீட்டுத் தொகை ரூ.75,00,000/–க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **திடக்கழிவு மேலாண்மை பராமரிப்பு பணிகள்- மனித ஆற்றல் உட்பட** என்ற தலைப்பின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2500.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ3/4490/2019(மையம்)**

**தீர்மானம் எண்.226 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 14 இ.பி. சாலையானது மிகவும் போக்குவரத்து நிறைந்த சாலையாகும். இச்சாலையின் வழியாக காந்தி சந்தை, வாழைக்காய் மண்டி, கருவாட்டுப் பேட்டை மற்றும் மீன்சந்தை ஆகியவற்றிற்கு போக்குவரத்து வாகனங்கள் தினசரி சென்று வருகின்றன. தற்போது இச்சாலையின் மைய தடுப்புச் சுவர்கள் மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதோடு விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. மேலும், மத்திய அரசினால் வழங்கப்படும் நட்சத்திர மதிப்பீடு நகரங்கள் (Star Ratings) தேர்ந்தெடுக்கும் பணி மற்றும் ஸ்வட்ச் சர்வக்ஷன் 2019 பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஸ்வட்ச் சர்வக்ஷன் 2019 நட்சத்திர மதிப்பீடு வழிகாட்டுதலின்படி, மேற்படி சாலையின் மையத்தில் தடுப்புச்சுவர் கட்டி பூச்செடிகள் வைத்து அழகுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஆகவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.98.00 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வேண்டியும் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

1) மதிப்பீட்டுத்தொகை ரூ.98,00,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை **2019-20**ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **பழையதார்சாலைகளை மேம்படுத்துதல் (4103004**) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.900.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ3/4653/2019(மையம்)**

**தீர்மானம் எண்.227 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 7க்குட்பட்ட விஸ்வாஸ் நகர் பகுதி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவாகும். இங்கு சுமார் 1200 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதிமக்கள் பயன்பாட்டிற்கென பல்நோக்கு சமுதாய கூடம் ( Multi Purpose Community Hall) கட்டித் தருமாறு அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை அளித்துள்ளனர். அதனடிப்படையில், அப்பகுதியில் உள்ள பூங்காக்கென ஒதுக்கப்பட்ட காலியிடத்தில் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பல்நோக்கு சமுதாயக் கூடம் கட்டும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.26.00 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதலுக்காக தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மதிப்பீட்டுத்தொகை ரூ.26,00,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **நகர்புற ஏழை மக்களுக்கானஅடிப்படை வசதிகள் செய்தல்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு ரூ.**250.00** லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.)

**இ3/4493/2019(மையம்)**

**தீர்மானம் எண்.228 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 61க்குட்பட்ட பாப்பாக்குறிச்சி பகுதி புகழ் நகரில் உள்ள சமுதாயக் கூடம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இப்பகுதிகள் இணைப்பதற்கு முன்பாக கட்டப்பட்டதாகும். தற்போது இந்த சமுதாயக் கூடம் தரைமட்டத்தினை விட சற்று தாழ்வாக உள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் கட்டித்திற்குள் புகுந்து விடுகிறது.மேலும், கட்டிடத்தின் பூச்சு ஆங்காங்கே பெயர்ந்து விழுந்துள்ளது. மேலும், சுற்றுச் சுவர் கட்டும் பணியினையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அவசர அவசியம் கருதி சமுதாய கூடத்தில் மராமத்து மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் சுற்றுச் சுவர் கட்டும் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.52.50 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதலுக்காக தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மதிப்பீட்டுத்தொகை ரூ.52,50,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **நகர்புற ஏழை மக்களுக்கானஅடிப்படை வசதிகள் செய்தல்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு ரூ.**250.00** லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

**இ3/4651/2019(மையம்)**

**தீர்மானம் எண்.229 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 62க்குட்பட்ட வடக்கு காட்டூர் நாகப்பசாமி கோவில் தெருவில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகம் திறந்த வெளியாக இருப்பதினால், சமூக விரோதிகள் பயன்படுத்தும் நிலை உள்ளது. மேலும், அருகே வசிக்கும் பொதுமக்கள் குப்பைகளை கொட்டும் இடமாகவும் உள்ளது. இதனை தவிர்க்க மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தினைச் சுற்றிலும் சுற்றுச்சுவர், துப்புரவு ஆய்வாளர் அலுவலக அறை கட்டவும், நூலகம் மராமத்து செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.42.50 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதலுக்காக தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1) மதிப்பீட்டுத்தொகை ரூ.42,50,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத் **தலைமை நீரேற்று நிலையப் பணிகள் / மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி/ பகிர்மான குழாய்கள் சீரமைத்தல் மற்றும் இதரப் பணிகள் (4103201)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.600.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ3/4650/2019(மையம்)**

**தீர்மானம் எண்.230 (பொருள்–5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம இனங்களுக்கு **01.04.2019** முதல் **31.03.2022** வரை மூன்றாண்டுகளுக்கு பொதுக்கட்டுபாடுகள், தனிக் கட்டுப்பாடுகள் மற்றும் உரிய சிறப்புக் கட்டுப்பாடுகளுடன் கட்டண விகிதங்கள் அடங்கிய ஏல விபர அறிக்கையை ( தனியே இணைக்கப்பட்டுள்ளது ) அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சக நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S. தஞ்சை பிரஷ் நிறுவனத்திடமிருந்து **(500)** அச்சடித்து பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் **1994** பிரிவு **15**ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**01.04.2019** முதல் **31.03.2022** வரை மூன்றாண்டுகளுக்கு ஏல உரிம இனங்களுக்கான ஏல பொதுக்கட்டுப்பாடுகள், தனிக்கட்டுப்பாடுகள் மற்றும் உரிய சிறப்புக் கட்டுப்பாடுகளுடன் கட்டண விகிதங்கள் அடங்கிய ஏல விபர அறிக்கை புத்தகங்கள் அச்சடித்தல் போன்ற பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.**1,14,000/**-க்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்.அ1(மை)/11173/2018**

**தீர்மானம் எண்.231 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.**1** மற்றும் **02**க்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேலசித்திரை வீதி, கீழசித்திரை வீதி மற்றும் தெற்கு சித்திரை வீதிகளில் உள்ள **6** அடி சுகாதார சந்துகளில் வெளியேறும் கழிவு நீர் வடிகால் மூலம் வெளியேற்றப்படுகிறது. மேற்படி தெருக்களில் அமைந்துள்ள வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்கள் **6** அடி சந்தில் புதிதாக **200** எம் .எம் விட்டமுள்ள பிவிசி பிரதான குழாய்கள் பதித்து ஆங்காங்கே ஆய்வுத் தொட்டிகள் கட்டி வீட்டு இணைப்புகள் கொடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.40.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ. 40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019–20**ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் “வடிகால் / புதைவடிகால் குழாய் அமைத்தல் **(3133)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.**50.00** இலட்சத்திலிருந்து இப்பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4711/2019(மையம்)**

**தீர்மானம் எண்.232 (பொருள்–7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.16,17 மற்றும் 18க்குட்பட்ட பகுதிகளில் அனைத்து தெருக்களில் பதிக்கப்பட்டுள்ள புதைவடிகால் சேகரக் குழாய்களில் அவ்வப்போது அடைப்பு ஏற்பட்டு வெளியேறும் கழிவு நீர் வடிகால் மூலம் வெளியேற்றப்படுகிறது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் பழுதடைந்துள்ள புதைவடிகால் சேகர குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக 200 எம்.எம் விட்டமுள்ள புதைவடிகால் சேகர குழாய்கள் பதித்து ஆங்காங்கே ஆய்வுத் தொட்டிகள் கட்டி வீட்டு இணைப்புகள் கொடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.16க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தெருக்களில் பழுதடைந்துள்ள புதைவடிகால் சேகர குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக 200 எம்.எம் விட்டமுள்ள புதைவடிகால் சேகர குழாய் பதித்தல் மற்றும் புதைவடிகால் வாயிற்நுழை தொட்டி (Manhole) உயர்த்தி கட்டும் பணி E7/4602/2019(மையம்) | 25.00 |
| 2 | வார்டு எண்.17க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தெருக்களில் பழுதடைந்துள்ள புதைவடிகால் சேகர குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக 200 எம்.எம் விட்டமுள்ள புதைவடிகால் சேகர குழாய் பதித்தல் மற்று புதைவடிகால் வாயிற்நுழை தொட்டி (Manhole) உயர்த்தி கட்டும் பணி E7/4604/2019(மையம்) | 22.40 |
| 3 | வார்டு எண்.18க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தெருக்களில் பழுதடைந்துள்ள புதைவடிகால் சேகர குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக 200 எம்.எம் விட்டமுள்ள புதைவடிகால் சேகர குழாய் பதித்தல் மற்றும் புதைவடிகால் வாயிற்நுழை தொட்டி (Manhole) உயர்த்தி கட்டும் பணி E7/4603/2019(மையம்) | 25.00 |

**அலுவலகக்குறிப்பு.**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019–20**ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் "பராமரிப்பு செலவினம் – புதைவடிகால் **(2125/1 )** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.**200.00** இலட்சத்திலிருந்து இப்பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4603/2019(மையம்)**

**தீர்மானம் எண்.233 (பொருள்–8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ–அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்து பராமரித்திட வேண்டியுள்ளது.

| வ. எண். | மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் பெயர் | கொள்ளளவு (இலட்சம்) |
|---|---|---|
| 1 | மங்களம் நகர் | 5.00 |
| 2 | சிவா நகர் | 5.00 |
| 3 | புத்தூர் (பழையது) | 4.50 |
| 4 | கருமண்டபம் | 5.00 |
| 5 | கல்லாங்காடு | 1.00 |
| 6 | தெற்கு இராமலிங்க நகர் | 4.50 |
| 7 | UKT பழையது | 1.50 |

| | | |
|---|---|---|
| 8 | UKT புதியது | 2.50 |
| 9 | கிராப்பட்டி பழையது | 2.00 |
| 10 | கிராப்பட்டி புதியது | 4.00 |
| 11 | அன்பு நகர் பழையது | 2.00 |
| 12 | அன்பு நகர் புதியது | 4.00 |
| 13 | எடமலைப்பட்டிபுதூர் புதியது | 4.00 |
| 14 | எடமலைப்பட்டிபுதூர் பழையது | 7.00 |
| 15 | உறையூர் பழையது | 10.00 |
| 16 | உறையூர் புதியது | 18.00 |
| 17 | பாத்திமா நகர் | 6.00 |
| 18 | ரெயின்போ நகர் | 6.00 |
| 19 | செல்வா நகர் | 6.00 |
| 20 | ஆனந்தம் நகர் | 12.00 |
| 21 | பாரதி நகர் | 6.00 |
| 22 | புத்தூர் புதியது | 20.00 |
| 23 | தில்லைநகர் | 20.00 |
| 24 | அண்ணா நகர் | 10.00 |
| 25 | ரெங்கா நகர் | 5.00 |
| 26 | பிராட்டியூர் காவேரி நகர் | 3.00 |
| 27 | பிராட்டியூர் | 1.00 |
| 28 | ஜெயா நகர் | 4.00 |
| 29 | விஸ்வாஸ் நகர் | 3.00 |
| 30 | ராம்ஜி நகர் | 1.50 |
| 31 | ஜங்ஷன் பொன்னகர் | 5.00 |

மேற்கண்ட 31 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளையும் சுத்தம் செய்திடவும், மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள வால்வு தொட்டிகளை சுத்தம் செய்திடவும், வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பேக்கிங் கசிவுகளை சரிசெய்து திரும்ப பேக்கிங் போடவும், மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள குடிநீர் பகிர்மான வால்வுகளை இயக்கி பராமரித்திடவும், மேலும் ஒவ்வொரு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் உள்ள சோடியம் ஹைப்போ குளோரைடு பம்புசெட்டுகளையும் ஓராண்டிற்கு இயக்கி பராமரித்திட இம்மாநகராட்சியில் மின்னியல் தொழில்நுட்பம் சார்ந்த பணியாளர்கள் இல்லாத காரணத்தால், ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் ஓராண்டிற்கு இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.86.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.86.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத் தொகையினை 2019–20ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் பராமரிப்பு செலவினம் (2305009) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.450.00 லட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளவும், கூடுதலாக இரண்டு ஆண்டுகள் தேர்வு செய்யப்படும் ஒப்பந்ததாரருக்கு இயக்கிப் பராமரிப்பதற்கான செலவினத் தொகையினை அந்தந்த ஆண்டுகளில் இதே தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**(இ4/4656/2019(மையம்)**

**தீர்மானம் எண்.234 (பொருள்–9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2019 யொட்டி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்14,15 மற்றும் 21க்குட்பட்ட 3 வார்டுகளில் உள்ள வாக்குச் சாவடிகளில் வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களிக்க ஏதுவாக சவுக்கு தடுப்புகள் மற்றும் சாய்வு மேடைகள் அமைத்தல், ஜெனரேட்டர் வசதிகள், பிளக்பாயிண்ட், மின்விசிறி, எமர்ஜென்சி விளக்கு, கம்ப்யூட்டர் பிளக்பாயிண்ட், டம்ளர், குவளை, குடிநீர் 20 லி, பிளாஸ்டிக் சேர் மற்றும் மேசை, நாற்காலிகள், சவுக்கு தடுப்புகள், இரும்பு தகட்டிலான தடுப்புகள், ஜக்குகள் மற்றும் தகர அடைப்புகள் போன்றவை வாடகை அடிப்படையில் செய்து கொடுக்கும் பணிகளை வாடகை அடிப்படையில் அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இப்பணிக்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.4.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.16 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருபாகரன், திருச்சி என்பவர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ3/3066/19)**

**தீர்மானம் எண்.235 (பொருள்—10) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) — ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**